/மின்னஞ்சலில்/

தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையரக இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி)
செயல்முறைகள், சென்னை-6

ஓ.மு. எண். 013430 / அ4 / இ1 / 2023,      நாள்.      .04.2023.

*****

பொருள்: பொதுப்பணிகள் - தகுதிகாண் ஆணைகள் திருப்திகரமாக நிறைவடைந்ததற்கான அறிக்கை - அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன - தாமதமாக ஆணை வெளியிடும் நேர்வுகளில் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளல் - மீண்டும் வலியுறுத்தல் - அரசிடமிருந்து பெறப்பட்ட கடிதம் - அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கும் அனுப்புதல் - சார்பு.

பார்வை: அரசுக் கடித எண்.4094530/எஸ்2/2023 மனிதவள மேலாண்மைத் (எஸ்) துறை, சென்னை 9 நாள். 06.03.2023.

----

அரசு ஊழியர்களின் தகுதிகாண் பருவம் விளம்புகை ஆணைகள் வெளியிடுதல் தொடர்பாக அரசு கடித எண்.14735/எஸ்/2010-1 பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் (எஸ்)த் துறை நாள்.08.04.2010ல் அறிவுறுத்தப்பட்ட அறிவுறுத்தங்களின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016ன் பிரிவு 32ன் படி உரிய காலத்திற்குள் தகுதிகாண் பருவ விளம்புகை ஆணைகளை உரிய நேரத்தில் வெளியிடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அவ்வாறு உரிய காலத்தில் ஆணைகள் வெளியிடாமல் வீண் காலதாமதம் ஏற்படுத்தும் அலுவலர்கள் மீது தமிழ்நாடு குடிமைப் பணிகள் ( ஒழுங்கு (ம) மேல் முறையீடு) விதிகளின் கீழ் உரிய நடவடிக்கை எடுப்பதை வலியுறுத்திட பெறப்பட்ட பார்வையில் காணும் அரசுக்கடிதம் பார்வைக்காகவும், உரிய நடவடிக்கைக்காகவும் அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கும் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

இதில் தனிகவனம் செலுத்திடுமாறு அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு: அரசுக்கடிதம் நகல்.

இணை இயக்குநர்(பணியாளர் தொகுதி)

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

நகல்:

1. உறுப்பினர் செயலர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை-6.
2. மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை-6.
3. இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்ககம், சென்னை-6.
4. இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை-6.
5. இயக்குநர், பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம், சென்னை-6.
6. இயக்குநர், தனியார் பள்ளிகள் இயக்ககம், சென்னை-6.
7. இவ்வாணையரக அனைத்து இணை இயக்குநர்கள்.
8. இவ்வாணையரக 'அ2'.

(மேற்கண்டவர்களுக்கு) தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

013430

மனிதவள மேலாண்மை (எஸ்) துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.

1
23.3.23

கடித எண்.4094530/எஸ்2/2023-1, நாள் 06.03.2023

பள்ளிக் கல்வி ஆணையரகம்
17 MAR 2023
சென்னை-06
கல்லூரிச்சாலை

அனுப்புநர்
திருமதி. மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப,
அரசு செயலாளர்.

பெறுநர்
அனைத்து துறை அரசு செயலாளர்கள், தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009. (இணைப்புடன்)
அனைத்து துறைத் தலைவர்கள். (இணைப்புடன்)
அனைத்து மாவட்ட நீதிபதிகள். (இணைப்புடன்)
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள். (இணைப்புடன்)
பதிவாளர்(நிர்வாகம்), சென்னை உயர்நீதிமன்றம், சென்னை – 600 104. (இணைப்புடன்)
பதிவாளர்(நிர்வாகம்), சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை,
மதுரை – 625023. (இணைப்புடன்)

ஐயா / அம்மையீர்,

பொருள்: பொதுப் பணிகள் – தகுதிகாண் ஆணைகள் திருப்திகரமாக நிறைவடைந்ததற்கான அறிக்கை – அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன – தாமதமாக ஆணை வெளியிடும் நேர்வுகளில் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளல் – மீண்டும் வலியுறுத்துதல் – தொடர்பாக

பார்வை: அரசு கடித எண்.14735/எஸ்/2010-1, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (எஸ்)த் துறை, நாள். 08.04.2010.

•••••••••

பார்வையில் காணும் கடிதத்தில் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொது விதிகளில், விதி 27ன்படி, உரிய அதிகாரிகளால் தகுதிகாண் பருவத்தை மனநிறைவாக முடித்ததற்கான ஆணைகள் சரியான நேரத்தில் வழங்கப்படா விட்டால், துறைகளின் அரசு செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர்கள் அத்தவறுகளுக்கு பொறுப்பான மேற்பார்வை அலுவலர்கள் மீது தகுந்த ஒழுங்கு நடவடிக்கை எடுக்கலாம் என அறிவுறுத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

2. தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொது விதிகள் நீக்கப்பட்டு, தற்போது தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 என புதிய சட்டம் இயற்றப்பட்டு 16.09.2016 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதில், மேலே குறிப்பிடப்பட்ட பொது விதி 27-ன் பொருண்மை தற்போது மேற்படி சட்டத்தின் பிரிவு 32-ல் கூறப்பட்டுள்ளது.

3. இந்நிலையில், அரசு ஊழியர்களின் தகுதிகாண் பருவம் விளம்புகை ஆணைகள் வெளியிடுதல் தொடர்பாக பார்வையில் காணும் அரசு கடிதத்தில் அறிவுறுத்தப்பட்ட அறிவுறுத்தங்களின் படி தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016-ன் பிரிவு 32-ன் படி உரிய காலத்திற்குள் தகுதிகாண் பருவ விளம்புகை ஆணைகளை உரிய நேரத்தில்

வெளியிடுமாறு சம்பந்தப்பட்ட அனைத்து நியமன அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது. அவ்வாறு உரிய காலத்தில் ஆணைகள் வெளியிடாமல் வீண் காலதாமதம் ஏற்படுத்தும் அலுவலர்கள் மீது தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு (ம) மேல் முறையீடு) விதிகளின் கீழ் உரிய நடவடிக்கை எடுப்பதை வலியுறுத்திட, அனைத்து அரசுச் செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தங்கள் உண்மையுள்ள,

அரசு செயலாளருக்காக.

நகல்:-
அனைத்து பிரிவுகள்,
மனித வள மேலாண்மைத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 600 009.